# திருவண்ணாமலை

# : : வரலாறு

ஸ்ரீ அருணாசலேசுவரர் தேவஸ்தான வெளியீடு

O23:45
283

உ

சிவமயம்

# திருவண்ணாமலை வரலாறு

இது சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசி

**திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்**

பி. ஏ., பி. எல்., அவர்களால் எழுதப்பெற்று

ஸ்ரீ அருணாசலேசுவரர் தேவஸ்தான தர்மகர்த்தர்களாகிய

திருவாளர்கள்

**M. B. ரங்கசாமி ரெட்டியார்**

**K. V. S. V. அழகப்ப செட்டியார்**


**T. S. முத்துக்குமார சுவாமி முதலியார்**

அவர்களால் வெளியிடப்பட்டது.


மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை

*All Rights Reserved*] 1940 விலை அணா ஒன்று.



திருக்கோயில்




தெப்பக்குளம்

உ

சிவமயம்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| உள்ளுறை | ... | iii |
| பதிப்புரை | ... | 1 |
| திருவண்ணாமலை வரலாறு | ... | 3 |
| தலத்தின் இருப்பிடம் | ... | 3 |
| தலத்தின் பழைய ஆட்சி | ... | 4 |
| மலையும் கோயிலும் | ... | 4 |
| கோயிலின் பிரகாரங்கள் கோபுரங்கள் | ... | 5 |
| திருக்கோயில் பூஜைகள் விழாக்கள் | ... | 7 |
| திருக்கோயில் நிர்வாகமும் வரவு செலவும் | ... | 8 |
| தனவணிகர் திருப்பணிகள் | ... | 10 |
| புராண வரலாறு | ... | 13 |
| திருவண்ணாமலையினைத் தரிசித்தோர் வரலாறு | ... | 17 |
| அருணகிரிநாதர் வரலாறு | ... | 21 |
| குகைநமச்சிவாயர் குருநமச்சிவாயர் | ... | 21 |
| கல்வெட்டுக்களின் சாரம் | ... | 22 |
| பெருஞ்சிங்கனும் மகனும் செய்தன | ... | 38 |
| திருவண்ணாமலையைப் புகழும் நூல்கள் | ... | 42 |
| திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேசுவரர் தேவஸ்தான ஆகம பாடசாலை பாட திட்டங்கள் | ... | 42 |




சிவகங்கைக்கரை விநாயகர் கோயில்

# பதிப்புரை

இச்சிறுநூல் சென்னை இந்து சமயநிலையப் பாது காப்புக் கழகத்தினரின் (Madras Hindu Religious Endowments Board) சுற்றறிக்கைக்கு இணங்க எழுதப்பட்டுள்ளது. இதை எழுதித் தருமாறு பணித்த சைவத்திருவாளர் - ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திர செட்டியாரவர்கட்கும், உடனிருந்து எழுதிய திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியாரவர்கட்கும், இக்கோயி லதிகாரிகட்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்து கின்றேன். திரு. செட்டியாரவர்களின் தூண்டுதலின் பேரில் திரு. T. M. நாராயணசுவாமிப் பிள்ளையவர் களும், திரு. A. S. மன்றாடி நாயரவர்களும் மேற்கூறிய கழகத்தினரும் செய்துவரும் பல புதிய தொண்டுகளைத் தமிழ்நாடு நன்கறியும். அன்னார் நீடூழி வாழ அண்ணா மலையெம் மண்ணல் அருள் புரிக.

திருவருளகம்<br>
கல்லுக்காரத் தெரு<br>
மயிலாப்பூர் 1-12-1940.

இங்ஙனம்<br>
ம. பாலசுப்பிரமணியன்



திருவண்ணாமலை ராயகோபுரமும் மலையும்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவண்ணாமலை வரலாறு

'உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே'

## தலத்தின் இருப்பிடம்

திருவண்ணாமலை என்ற சிவஸ்தலம் வடஆர்க்காடு ஜில்லாவில் திருவண்ணாமலை தாலுகாவின் தலைநகராகவுள்ளது. இந்தத் தாலுகா 1911-ம் வருடம் வரையில் தென்னார்க்காடு ஜில்லாவைச் சேர்ந்திருந்தது. திருவண்ணாமலை விழுப்புரத்திற்கும் காட்டுப்பாடிக்குமுள்ள இருப்புப்பாதையில் இடையிலுள்ள ஒரு நகரம். ரயில் வழியேயன்றி மோட்டார் வழியாகவும் காஞ்சிபுரம், வேலூர், திண்டிவனம், செய்யாறு, வந்தவாசி, செங்கம் முதலிய பல விடங்களிலிருந்து எளிதில் வருதல் கூடும். திருவண்ணாமலையில் அண்ணாமலை நாதர் திருக்கோயிலேயன்றி வேறு பல பொது நிலையங்களுமுள்ளன. அவை நகரபரிபாலன சபை (Municipality), உயர்தரப் பள்ளிக்கூடங்கள் (High Schools), பெண் பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள் (Hospitals), டிப்டி கலெக்டர் (Deputy Collector) ஆபீஸ், தாசில்தார் ஆபீஸ், முன்சீப் கோர்ட்டு முதலியனவாகும்.

## தலத்தின் பழைய ஆட்சி

திருவண்ணமலை பழைய காலத்தில் சோழ மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. பிற்காலத்தில் கி. பி. பதினன்காம் நூற்றுண்டில் ஹொய்சள வம்சத்தினர் திருவண்ணமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பிறகு விஜயநகரத்து ராயர்களும் தஞ்சாவூர் நாய்க்கர்களும் ஆண்டு வந்தனர். கி. பி. 17-ம் நூற்றுண்டில் கர்நாடக நவாப்பினுடைய மகம்மதிய ஆட்சிக்கு இந்தப் பிரதேசம் உட்பட்டதாயிற்று. கி. பி. 1753-ம் வருடமுதல் 1760-ம் வருடம் வரை இப்பகுதியில் மிகுந்த குழப்பம் ஏற்பட்டு முராரி ராயர், கிருஷ்ண ராயர், மிருத்திஸ் ஆலிகான், பர்க்கத் உல்லாகான், பிரெஞ்சு சூப்பிரே (Soupires), சாபினே (Saubinet), ஆங்கில காப்டன் ஸ்டீபன்ஸ்மித் (Captain Stephen Smith) முதலியோர் இவ்வூரை முற்றுகை செய்து மாறிமாறி வெற்றியும் தோல்வியுமடைந்து வந்தனர். கி. பி. 1790-ல் திப்பு சுல்தான் (Tippu Sultan) இதைக் கைப்பற்றினன். 19-வது நூற்றுண்டின் முற்பகுதியில் இது ஆங்கில ஆளுகைக்கு உட்பட்டதாயிற்று. இத்தலத்தில் நகரபரிபாலன சபையின் கணக்குப்படி இப்போது ஏறக்குறைய 3941 வீடுகள் உள்ளன. இந்நகரத்தின் ஜனத்தொகை 27,769 என்று கூறப்படுகின்றது. இத்தலத்தில் வழிபாடு செய்ய வருவோர் தங்குவதற்கு வசதியாக ஏராளமான சத்திரங்களும் மடங்களும் உள்ளன. திருக்கோயில் ரயில்வே நிலையத்தினின்றும் ஒரு மைல் தூரத்திற்குள் இருக்கிறது.

## மலையும் கோயிலும்

இத்தலத்திலுள்ள மலையினுச்சி, கடல் மட்டத்திற்கு மேல் 2668 அடி உயரமுள்ளதென்று அரசாங்கத்தினர் கணித்துள்ளார்கள். இந்நகரத்திலுள்ள அண்ணமலையார்

திருக்கோயில் தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரிய கோயில் களுள் ஒன்றாகும். இக்கோயிலின் விஸ்தீரணம் சுமார் 25 ஏகர் என்று கூறப்படுகின்றது. இதன் வெளிப் பிரகாரத்துத் திருமதில்கள் கோட்டைச் சுவர்கள் போல மிக உயரமாகவும் கனமாகவுமுள்ளன. கீழண்டை சுவரும் மேலண்டை சுவரும் சுமார் 700 அடி நீளமும், தென் புறம் சுவர் 1479 அடி நீளமும், வடபுறம் சுவர் 1590 அடி நீளமும் உள்ளன. கிழண்டை பக்கமுள்ள 11 நிலைப் பெரிய கோபுரம் 217 அடி உயரமுள்ளது. இக்கோபுரத்தின் அடி நிலை 135 அடி நீள மும் 98 அடி அகலமும் உள்ளது.

## கோயிலின் பிரகாரங்கள் கோபுரங்கள்

இக்கோயிலில் மூன்று பிரகாரங்கள் உள்ளனவாகக் கொள்வது மரபு. ஆனால் இதனோடு சேர்க்கப்பட்டிருக்கும் கோயிற் படத்தைப் பார்த்தால் இது ஐந்து பிரகாரங்களை யுடையதென்றும், மடை விளாகம் திருவீதி ஆகிய இரண்டும் சேர்ந்து ஏழு பிரகாரங்களை யுடையதென்றும் சொல்லலாம். கோயிலின் வடகிழக்கு மூலையில் ஆயிரக்கால் மண்டபமும், அதற்கெதிரில் சிவகங்கை தீர்த்தமும் உள்ளன. இவையுள்ள பிரகாரம் சாதாரண வழக்கில் மூன்றும் பிரகாரம் என்றும் மேற் கூறிய கோயிற் படத்தில் ஐந்தாம் பிரகாரம் என்றும் குறிக்கப்படுகின்றது. இப்பிரகாரத்திலிருந்து உள்ளே கிழக்குப் பக்கத்தில் நுழையும்போது உள்ள கோபுரமே வல்லாள மஹா ராஜன் கோபுரம் எனப்படும். இக்கோபுரத்தி லிருந்து அருணகிரிநாதர் கீழே விழும்வேளையில் அவரைக் காப்பாற்றிய முருகப்பெருமான் இக்கோபுரத்தின் வட பாலில் கோயில் கொண்டுள்ளார். வல்லாளன் கோபுரத்தின் வழியாக உள்ளே சென்றால் தென் கிழக்கு மூலையில் பிரம தீர்த்தமும் வடகிழக்கு மூலையில் சக்தி விலாச சபையும் உள்

ளன. பிரம தீர்த்தத்திற்குத் தெற்கே உள்ள பெரிய கோபுரத்திற்குத் திருமஞ்சன கோபுரம் என்று பெயர். இது சில வாண்டுகளுக்கு முன் திருப்பத்தூர் - சூரிய நாராயண செட்டியாரால் பழுது பார்க்கப்பட்டது. இவர் இக்கோபுரத்திற்கு மேற்கில் திருவருள் விலாசம் என்ற ஒரு கட்டிடத்தையும் அமைத்துள்ளார். பிரம தீர்த்தமுள்ள பிரகாரத்திலிருந்து கிழக்குப் பக்கமாக மேற்கு நோக்கி உட்சென்றால் காணப்படுவது கிளிகோபுரம். இக்கோபுரத்தின் ஸ்தூபி கலசங்களில் தெற்கு மூலையிலிருப்பதில் ஒரு கிளியின் உருவம் காணப்படுகின்றது. அருணகிரிநாதர் கிளியாக இருந்து கந்தரனுபூதி பாடினரெனப்படுவதை நினைவூட்ட இது அமைக்கப்பட்டது போலும். கிளி கோபுரத்திற்கு எதிரேயுள்ள மண்டபத்தில் அண்ணாமலைநாதர் முதலிய பஞ்ச மூர்த்திகள் கார்த்திகை தீபத் திருநாளன்று மாலையில் மேற்கு முகமாக எழுந்தருளியிருந்து தீபதரிசனக் காட்சி அளிப்பார்கள். இம்மண்டபத்திற்கு வடக்கே ஏகாம்பரேசர், ஜம்புகேசுவரர், காளத்தீசர், சிதம்பரேசர் சந்நிதிகள் சிறு ஆலயங்களாக அமைந்துள்ளன. காளத்தீசர் சந்நிதிக்குத் தெற்கே யாகசாலை அமைந்துள்ளது. இந்தப் பிரகாரத்தில் துவஜஸ்தம்பத்திற்குத் தெற்கேயுள்ள விநாயகர் சந்நிதி ஒன்றுண்டு. இவ்விநாயகர் ஸ்ரீசம்பந்த விநாயகர் எனப் பெயர் பெறுவர். சாதாரண மக்கள் இவரை முக்குறுணி விநாயகர் என்பர். இச்சந்நிதிக்குச் சிறிதுதெற்கே மகிழமரமாகிய தலவிருக்ஷம் காணப்படுகின்றது. தலவிருக்ஷத்திற்கு மேற்கேயுள்ளது கலியாணமண்டபம். இக்கல்யாணமண்டபத்திற்கும் மகிழமரத்திற்கும் வடக்கேயுள்ள கருங்கற் சுவரில் பலபழைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கல்யாணமண்டபத்திலிருந்து வலமாகச் சுற்றிவரும்போது மேற்கே காணப்படுவது அருணகிரி நாதர் சந்நிதி. இச்சந்நிதிக்கு எதிரிலுள்ள

கருங்கற் சுவரிலும் கல்வெட்டுக்கள் நிறைந்துள்ளன. இங்கிருந்து வலமாகச் சுற்றிவந்தால் உண்ணுமுலை யம்மையார் சந்நிதியடையலாம். அங்கிருந்து வலமாகவந்து துவஜஸ்தம்பத்தையடைந்து அங்குள்ள நந்திதேவரைத் தரிசித்து உள்ளே சென்றால் அண்ணுமலையார் சந்நிதிக்குச் செல்லலாம். இங்கே கருப்பக் கிரகச் சுவர்களில் மிகப்பழமையான கல்வெட்டுக்களுள்ளன. மற்றச் சந்நிதிகளின் விபரங்களை இந் நூலிற் சேர்க்கப்பட்டுள்ள படத்திற் காண்க.

இத்தலம் பஞ்சபூத ஸ்தலங்களுள் தேஜஸாகிய தீயைக் குறிப்பது. இம்மலையே தீப்பிழம்பாகக் காணப்பட்டுப் பிறகு இச்சிறுமலை யாயிற்றென்பது புராண வரலாறு. இதன் நினைவாகவே இப்போதும் திருக்கார்த்திகை தீபத்திருவிழா நடக்கிறது. தீயினுல் சிவப்பான நிறம் ஏற்பட்டதால் இம்மலைக்கு சோணகிரி, அருணுசலம் என்ற பெயர்கள் உண்டாயின. இத்தலம் தேவாரப்பாடல் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் பதிக மிரண்டும் திருநாவுக்கரசர் பதிகம் மூன்றும் இதற்குள்ளன. இத்தலத்துச் சுவாமி பெயர் அண்ணுமலையார், அருணுசலேசுவரர் என்றும், தேவியார் பெயர் உண்ணுமுலை யம்மை, அபீதகுஜாம்பாள் என்றும் கூறப்படுகின்றன. இத்தலத்தை நினைத்தாலும் முத்தி கிடைக்குமென்பது புராணத்தின் கூற்று.

## திருக்கோயில் பூஜைகள் விழாக்கள்

இக்கோயிலில் தினந்தோறும் ஆறுகாலபூஜைகள் நடந்து வருகின்றன. கார்த்திகைமாதத்தில் கார்த்திகைநாளைத் தீர்த்தமாகக்கொண்டு பெரியதிருவிழாவும், சித்திரை மாதத்தில் சித்திரைத் திருநக்ஷத்திரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு அயனேற்சவமும், பங்குனி உத்திரத்தில் திருக்கலியாணமும் ஆறுநாள் விழாவும், மாசிமகத்தில் வல்லாளன் விழாவும்,

தைமாதம் இரண்டாந் தேதியன்று திருவூடல் விழாவும், அதற்குமுன்பு பத்துநாள் விழாவும், ஆனிவிழாவும், ஆடியில் அம்பிகைவிழாவும், பவித்ரோற்சவம், நவராத்திரி, கந்தர்சஷ்டி திருவெம்பாவையுற்சவம், மார்கழித் திருவாதிரை முதலி யனவும் சிறப்பாக நடக்கின்றன. மலையைப் பஞ்சமூர்த்திகள் வலம்வரும் உற்சவம் கார்த்திகைத் தீபத்திற்கு அடுத்தநாளும் திருவூடல் விழாவன்றுமாக ஆண்டுக்கு இரண்டு முறை நடை பெறுகிறது. மலையைச்சுற்றி வருவதற்கு எட்டுமைல் நீள முள்ள செம்மையான பாதையுள்ளது.

## திருக்கோயில் நிர்வாகமும் வரவு செலவும்

இக்கோயிலின் நிர்வாகம் வடஆர்க்காடு ஜில்லா கோர்ட் டில் 1933-வருடத்தில் முதல் நம்பர் அசல்வழக்கில் (O. S. No. I of 1933) 19-3-34-ல் ஏற்பட்ட (Scheme) திட் டத்தின்படி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்படி மூன்று தர்மகர்த்தர்கள் சென்னை இந்துசமயநிலையப் பாதுகாப் புக் கழகத்தினரால் (Hindu Religious Endowments Board)ஐந்தாண்டுக்கு ஒருமுறை நியமிக்கப் பெறுகின்றனர். இவர்களுள் ஒருவர் நாட்டுக்கோட்டை நகரத்தாராகவும் மற் றிருவரும் வடஆர்க்காடு ஜில்லாவாசிகளாகவும் ஒவ்வொரு வரும் 300 ரூபாய் நிலவரியோ 150 ரூபாய் வருமான வரியோ செலுத்தும் தகுதியுடையவராகவும் இருத் தல் வேண்டும். தருமகர்த்தர்கள் மாதத்திற்கு ஒரு முறை கூடி முன்மாதத்திய கணக்குகளை அங்கீகரிக்க வேண்டும். கோயிலின் தினசரி நிர்வாகத்தைக் கவனிப்பதற்குத் தரும கர்த்தர்கள் 100 ரூபாய் மாத சம்பளமுள்ள ஒரு மானேஜரை போர்டாரவர்களுடைய சம்மதம்பெற்று நியமிக்கவேண்டும். நிர்வாகத்தின் செம்மைக்குரிய வேறு பல விபரங்கள் இந்தத்

திட்டத்தில் காணப்படுகின்றன. இக்கோயிலின் ஆண்டு வரவு செலவு விபரம் கீழ் வருமாறு :—

| வரவு | | ரூபா |
|---|---|---|
| நிலவருமானம் | சுமார் | 10,000 |
| கட்டிடங்கள் கடைகள் குடிக்கூலி | ,, | 5000 |
| இனும் சுரோத்திரியம் வகை | ,, | 2400 |
| கவர்ன்மெண்ட் தஸ்திக் | ,, | 6000 |
| மைசூர் கவர்ன்மெண்ட் மூலம் | ,, | 450 |
| உபயம் உண்டி காணிக்கை மூலம் | ,, | 13,000 |


| செலவு | | |
|---|---|---|
| நித்திய பூஜை | சுமார் | 3,600 |
| பஞ்ச பருவங்கள் | ,, | 400 |
| விசேடவுற்சவங்கள் | ,, | 2200 |
| கார்த்திகைத் திருவிழா | ,, | 5200 |
| சிப்பந்திகள் சம்பளம் முதலியன | ,, | 8000 |
| வரியிறை முதலியன | ,, | 2500 |
| நிலம் கட்டிடம் பழுது பார்க்க | ,, | 1500 |
| வாகனங்கள் நகைள் செய்ய, பழுது பார்க்க முதலியன | ,, | 1000 |
| கணக்குப் பரிசிலனைக்காகக் கட்டணமும் எண்டோமண்ட் போர்டு கட்டணமும் | ,, | 1300 |
| வழக்கு முதலிய செலவுகள் | ,, | 600 |
| ஆகம பாடசாலை | ,, | 500 |

மேற் கூறிய கணக்கில் அகப்படாமல் பல உபயங்கள், கட்டளைகள், உற்சவங்கள், மின்சார விளக்கு அமைப்பு முதலியவற்றிற்குச் சுமார் 15000 ரூபாய் பல தர்மப் பிரபுக் களால் செலவு செய்யப்படுகின்றது. இப்போது திருவாளர் கள் M. B. ரங்கசாமி ரெட்டியார், K. V. S. V. அழகப்ப செட்டியார், T. S. முத்துக்குமாரசாமி முதலியார் ஆகிய மூவர்

தர்மகர்த்தர்களாகவும் திரு. S. நரசிம்ம ஐயர் மானேஜராகவும் உள்ளார்கள். திரு. T. S. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்களுடைய பாட்டனார் இராமு முதலியார் கீழண்டை திட்டி வாசலுக் கெதிரிலுள்ள மண்டபத் திருப்பணியைத் தமது சொந்த செலவில் செய்தனர்.

## தனவணிகர் திருப்பணிகள்

இக்கோயில் ஐம்பது வருஷங்களுக்கு முன்பு மிகவும் இலமாய் இருந்ததை நாட்டுக்கோட்டை நகரத்தன்பர்கள் பலர் கண்டனர். சுவாமி கோயிலையும் அம்மன் கோயிலையும் பிரித்து உயரமாகவும் விசாலமாகவும் காற்றும் வெளிச்சமும் அதிகரிக்கும் வகையிலும் கோட்டையூர் அ. க. வகையறுக்கள் தங்கள் சொந்தப் பொருளைக் கொண்டும் நகரத்தார் உதவிய பொருளைக் கொண்டும் சுமார் 12 லக்ஷ ரூபாய் செலவில் திருப்பணிசெய்து 1905-ம் வருஷம் கும்பாபிஷேகம் செய்வித்தனர். இராமச்சந்திரபுரம் தீ. சொ. நா. தீ. அ. விலாசத்தினர் 50000 ரூபாய் செலவில் திருக்கல்யாண மண்டபத் திருப்பணி செய்தனர். சிவகங்கை தீர்த்தத்தைக் கோட்டையூர் க. வீ. அள. குடும்பத்தினர் 1,75,000 ரூபாய் செலவு செய்து திருப்பணி செய்தனர். செட்டிநாட்டு ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் 75000 ரூபாய் செலவில் பிரம தீர்த்தத்தைத் திருப்பணிசெய்து செம்மைப்படுத்தினர். கோட்டையூர் அ. க. மெ. வகையறுக்களும் ராம. பெ. அவர்களும் சேர்ந்து அடி அண்ணாமலை கோயிலை $3\frac{1}{2}$ லக்ஷ ரூபாய் செலவுசெய்து திருப்பணி முடித்தனர். திருவூடல் தெருவில் ஓயாமடம் அமைத்துக் கார்த்திகைத் திருவிழாவில் கடைசி ஐந்து நாட்களில் ஆயிரக்கணக்கான ஏழைகட்கு எந்த நேரத்திலும் இல்லையென்று சொல்லாமல் நகரத்தார் பொதுவில் அன்னம் கொடுத்து வருகின்றார்கள். தினசரி நடக்கும்



சிவகங்கை தீர்த்தம்

ஆறுகால பூஜைகளில் நான்கு கால பூசைகளுக்கு உதவிகளை நகரத்தார் செய்துள்ளார்கள். இராமச்சந்திரபுரம் தீ. சொ. குடும்பத்தினர் 1,20,000 ரூபாய் செலவுசெய்து வெள்ளி ரதம் சமர்ப்பித்துள்ளனர். கோட்டையூர் அ. க. அ.மெ. வகையருக்கள் 35000 ரூபாய் செலவுசெய்து வெள்ளி ரிஷப வாகனத்தையும் 90000 செலவுசெய்து தினந்தோறும் மின்சார விளக்குகள் எரிவதற்காக எலெக்டிரிக் யந்திரம் இரண்டையும் வைத்து அவை என்றும் பயன்படுவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்துள்ளார்கள். கோட்டையூர் பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்களும் அவர்கள் தம்பியாருமாக 35000 ரூபாய் செலவில் வெள்ளி விமானம்செய்து வைத்தனர். காரைக்குடி முத்து. அரு. வகையருக்கள் 75000 ரூபாய் செலவுசெய்து ஒரு வேத பாடசாலை நடத்தி வருவ தோடு 60000 ரூபாய் செலவில் வெள்ளிக் காமதேனு கற்பக விருக்ஷ வாகனங்களும் செய்துள்ளார்கள். இன்னும் நகரத்தாரால் செய்யப்பெற்ற பற்பல விலையுயர்ந்த திருப்பணிகளின் விபரங்கள் முழுமையும் தனிப்புத்தகமாக அச்சிடப்பட்டுள்ளது. இதனைத் தேவஸ்தான ஆபீஸில் காணலாம். நகரத்தார் திருப்பணிகளுள் பலவற்றை முயற்சி யெடுத்துக்கொண்டு ஏற்பாடு செய்தவர் இக்கோயிலில் 25 ஆண்டுகள் தருமகர்த்தராகப் பணிபுரிந்து 1939-ம் வருடம் ஜூன் மாதத்தில் சிவபதமடைந்த கோட்டையூர் ராவ்பகதூர் பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்களே யாவர். இவர்களுடைய முயற்சியாலும் இவருக்கு முன்பு இவரைப் போலவே தமது ஆயுள் முழுமையும் தருமகர்த்தராகப் பணிபுரிந்த ஆர்க்காடு ராவ்பகதூர் தனகோடி முதலியார் அவர்களுடைய நன் முயற்சியாலும் இக்கோயில் சீர்பெற்று ஓங்கி விளங்குவதாயிற்று.

## புராண வரலாறு

இத்தலத்தின் பெருமையும், இதில் இறைவனை வழி பட்டோர் அடைந்த இன்பமும், திருவிழாக்கள் திருப்பணி கள் முதலியன தோன்றிச் சிறப்புற்ற செய்திகளும் சிவ மஹாபுராணம், சிவரகஸ்யம், அருணாசல புராணம், அருண கிரி புராணம் முதலிய பல புராண நூல்களில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றின் சுருக்கம் கீழ்வருமாறு கூறத் தகும்.

பிரமதேவரும் திருமாலும் ஒரு காலத்தில் தமக்குள் சண்டையிட்டுத் தாமே பெரிய கடவுளாகிய பரம்பொருள் என்று வாது செய்தனர். இவர்கள் சண்டையினால் உயிர் வருக்கங்களுக்கெல்லாம் துன்பம் நேர்ந்தது. தேவர்களெல் லாம் சிவபெருமானிடம் சென்று இவர்கள் சண்டையை யொழித்து உயிர்களுடைய துன்பத்தை நீக்கும்படி முறை யிட்டனர். சிவபெருமான் இம்முறையீட்டிற்கிரங்கி பிரம விஷ்ணுக்கள் முன்பு அடியும் நுனியும் காணவொண்ணாத ஒரு பெரிய நெருப்பு மலையாகத் தோன்றினார். இதைக் கண்ட பிரமனும் திருமாலும் எதிரே தோன்றிய நெருப்பு மலையின் முடியையும் அடியையும் முறையே காணவேண்டும் என்றும் கண்டவரே பெரியவர் என்றும் சபதஞ் செய்து கொண்டனர். பிரமதேவர் அன்னப்பறவையாக உருக் கொண்டு முடியைக் காணுமாறு புறப்பட்டார். திருமால் வராகவடிவங் கொண்டு அடியைக் காணப் புறப்பட்டார். திருமால் தம்மாலியன்ற அளவு ஆழமாகச்சென்று அகழ்ந்து பார்த்தும் திருவடியைக் காணமாட்டாது திரும்பிவிட்டார். ஆனால் பிரமதேவரோ வானத்தில் இயன்றவளவு பறந்து சென்றும் திருமுடியைக் காணாமல் ஏக்கமுறும் சமயத்தில் மேலேயிருந்து மிக விரைவில் கீழே யிழிந்துவரும் ஒரு

தாழம்பூவைக் கண்டார். அத்தாழம்பூவை விசாரித்ததில் தம்மால் திருமுடியைக் காண இயலாதென்பதைத் தெரிந்து கொண்டார். பிறகு அந்தத் தாழம்பூவைப் பொய் சாட்சி சொல்லும்படியாக வேண்டிக்கொள்ள அதுவும் உடன்பட்டுப் பிரமன் இறைவன் திருமுடியைக் கண்டது உண்மையென் றும், திருமுடியிலிருந்து தானும் பிரமனும் ஒன்ருகப் புறப் பட்டுக் கீழிறங்கி வருவதென்றும், நிலத்தை அகழ்ந்து சென்று திருவடியைக் காணுது திரும்பிய விஷ்ணுவுக்குத் தெரிவித்தது. உடனே அந்த நெருப்பு மலையிலிருந்து சிவ பெருமான் வெளித்தோன்றி பிரமனும் தாழம்பூவும் சொல் வது பொய்யென்றும், இவ்வாறு பொய் பேசியதால் பிரம னுக்கு எங்கும் கோயிலும் வழிபாடும் இல்லாமற் போகக்கடவ தென்றும், தாழம்பூ சிவபூசைக்கு ஆகாத பொருளென்றும், விஷ்ணு உண்மையைக் கூறியதால் அவரே பிரமனைவிடப் பெரியவரென்றும் அருளிச் செய்தார். பிறகு பிரம விஷ்ணுக்க ளாகிய இருவருக்கும் தாமே பெரிய முழுமுதற் கடவுளென் றும், தமது நிஷ்கள சகள உருவங்களின் தன்மை ஈதென் றும், தம்மை இலிங்கத்திலும் வேறுவுருவங்களிலும் வழிபட வேண்டிய அவசியம், வழிபாட்டின் பயன் முதலியன இவை யென்றும் விளக்கமாகக் கூறினர். பிரமனும் விஷ்ணுவும் தங்களுடைய சச்சரவிற்குக் காரணமாயிருந்த அஞ்ஞானம் நீங்கப்பெற்றுச் சிவபெருமானைத் தோத்திரம் செய்தனர். அவர்கள் தோத்திரத்திற்கு இணங்கிச் சிவபெருமான் தாம் ஒரு சிறு மலையாகவும், அம்மலையின் சாரலில் ஒரு இலிங்க வடிவமாகவும் உயிர்கள் வழிபடுவதற் கென்றே தோன் றுவதாகவும் தாம் ஒரு பெரிய அனற்பிழம்பாக உருக் கொண்டதின் நினைவுக்குறியாக ஒவ்வொரு வருடத்திலும் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நன்னுளில் அம்மலையினுச் சியில் ஒரு சோதி விளக்கம் காட்டுவதாகவும், அதைக் காண

போர் திருவடி முத்தியடைவர் என்றும் கூறி மறைந்தார். உடனே அக்னிமலை ஒரு சிறிய மலையாக மாறி அம்மலையின் அடிவாரத்தில் ஓர் இலிங்கம் தோன்றிற்று. இம்மலையே திருவண்ணாமலை. இவ்விலிங்கமே அண்ணாமலை நாதர். இதுவே இலிங்கோற்பவத்தின் வரலாறு.

இவ்வரலாற்றின் உட்கருத்து தேவார திருவாசகங்களில் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. "பெருமைகள் தருக்கி யோர் பேதுறுகின்ற பெருங்கடல் வண்ணனும் பிரமனும் ஓரா, அருமையர்", "திருவினார் போதினானும், திருமாலும் ஓர் தெய்வமுள்ளத், தெரிவினார் காண மாட்டார் திகழ் சேவடி", "கடல் வண்ணனும், வேதக்கிளர் தாமரை மலர் மேலுறை கேடில் புகழோனும், அளவாவண மழலாகிய அண்ணாமலை யண்ணல்", "வில்லிமையினால் விறலரக்கன் உயிர் செற்றவனும் வேத முதலோன், இல்லையுளது என் றிகலிநேட எரியாகி யுயர்கின்ற பரன்", "செந்தளிர் மாமல ரோனும் திருமாலும் ஏனமோடு அன்னமாகி, அந்தம் அடி காணாதே அவரேத்த வெளிப்பட்டோன்", "பிரமன் அரி யென்றிருவரும் தம் பேதைமையால், பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க, அரனாரழல் உருவாய் அங்கே அளவிறந்து, பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ" எனவரும் திருவாக்குகள் காண்க. இக்காலத்து அறிஞர்கள் இவ்வுட்கருத்தைச் சமரசப்படுத்தி அழகாகக் கூறுகின்றனர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தமது தேவாரத்தில் ஒவ் வொரு பதிகத்துள்ளேயும் இவ்வரலாற்றை 9-வது பாட்டில் கூறுகின்றார். இவ்வாறு கூறும் நோக்கத்தைச் சேக்கிழார் சுவாமிகள் "தொழுவார்க்கே யருளுவது சிவபெருமான் எனத் தொழார், வழுவான மனத்தாலே மாலாய மாலயனும், இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை, விழுவார் கள் அஞ்செழுத்துந் துதித்துய்ந்தபடி விரித்தார்" என

விளக்குகின்ருர். இலிங்கோற்பவ மூர்த்தி ஒவ்வொரு சிவ சந்நிதியின் பின்புறத்திலும் பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ளது.

திருவண்ணுமலையில் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் ஒளியுருவம் தோன்றும் செய்தி வேருெரு வகையாகவும் கூறப்படுகின்றது. உமாதேவியார் ஒருநாள் விளையாட்டாக இறைவனுடைய கண்களைத் தமது கரங்களால் ஒரு க்ஷண நேரம் மூடினுர். இது கோடிக்கணக்கான உயிர்களுக்குப் பல்லூழி காலம் இருளைத் தந்து துன்பம் விளைவித்தது. இது கண்டு ஆற்ருத சிவபெருமான் தமது நெற்றியிலே ஒரு கண்ணையும் அக்கண்ணின் மூலம் ஒளியையும் தோற்றுவித்து உயிர்களின் துன்பத்தைப் போக்கினுர். உமாதேவியார் தமது திருவிளையாட்டால் விளைந்த துன்பத்தை யறிந்து அதற்குக் கழுவாயாகப் பூலோகத்தில் காஞ்சிமாநகரத்தில் சிவபூசை செய்தார். அங்கு இறைவன் தோன்றித் "திருவண்ணுமலையில் நம்மைப் பூசித்து நமது இடப்பாகப் பேறு அடைவாய்" என்றருளினுர். அம்மையார் திருவண்ணுமலையில் கடுந்தவம் புரிந்து கார்த்திகைத் திருவிழாவை நடத்திக் கார்த்திகை நன்ளில் வணங்கினவுடன் மலைமீது ஒரு சோதியுண்டாகி அதில் சிவபெருமான் எழுந்தருளி அம்மலையை வலம் வரும்படி கட்டளை யிட்டார். அவ்வாறே அம்மையார் வலம் வருகின்ற போது மேலைத் திசையில் இடப வாகனத்தின் மீது காட்சி கொடுத்தார். (அவ்விடத்திலேயே இப்போது அடி அண்ணு மலை யென்ற அணியண்ணுமலைக் கோயிலிருக்கிறதா ?) பிறகு வலஞ் செய்து முடித்தவுடன் வடகிழக்கு மூலையில் இறைவன் உமாதேவியாரைத் தழுவி இருவர் உருவமும் ஒரு வடிவாக விளங்க அர்த்தநாரீசுவரக் கோலமாய்க் காட்சியளித்தார். இக் காட்சி கார்த்திகை தீபத் திருவிழாவில் இன்றைக்கும் தீபதரி

சன வேளையில் அர்த்தநாரீசுவரர் வருகையால் நமக்கு அருளப் பெறுகின்றது.

இத்தலத்தில் சிவராத்திரியில் வழிபாடு செய்தல் மிக்க புண்ணியமளிக்குமென்று சிவ மஹாபுராணம் கூறுகின்றது.

## திருவண்ணாமலையினைத் தரிசித்தோர் வரலாறு

முருகப்பெருமான் தாருகனை வதைசெய்து தெற்கு நோக்கி வருங்கால் காசி, ஸ்ரீபருப்பதம், திருக்காளத்தி, காஞ்சி முதலிய தலங்களைத் தரிசனஞ் செய்துகொண்டு திருவண்ணாமலையினைத் தரிசித்த செய்தியைக் கந்தபுராணம் உற்பத்தி காண்டம் வழி நடைப்படலம் 11 வது பாடல் அறிவிக்கின்றது:—

என்னிகர் எவரும் இல்லென் றிருவரு மிகலும் எல்லை
அன்னவர் நடுவு தோன்றி யடிமுடி தெரியா தாகி
உன்னினர் தங்கட் கெல்லாம் ஒல்லையில் முத்தி நல்கி
தன்னிகர் இன்றி நின்ற தழல்பெருஞ் சைலங் கண்டான்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருஅறையணி நல்லூரிலிருந்தே அண்ணாமலையினை அன்பர்கள் காட்டக் கண்டு "உண்ணாமுலை யுமையாள்" எனும் பதிகம்பாடி அடியார்குழாத்தொடும் திருவண்ணாமலையினை யடைந்து "மலைமீது தங்கு விருப்பில் வீற்றிருந்தார்" திருவடிகளை வணங்கிப் "பூவார் மலர்" என்ற திருப்பதிகம்பாடி அத்தலத்தில் சில நாள் வசித்துப் பிறகு பதி பலவும் பணிந்து திருவோத்தூர் சேர்ந்தார். இவ்வரலாற்றினைச் சேக்கிழார் சுவாமிகள் திருஞானசம்பந்த நாயனார் புராணத்துள் 969—972 பாடல்களுள் விரித்துக் கூறுகின்றார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவண்ணாமலையைத் தரிசித்ததைச் சேக்கிழார் சுவாமிகள் "செங்கண் விடையார்

திருவண்ணாமலையைத் தொழுது வலங்கொண்டு, துங்கவரை யின்மிசையேறித் தொண்டர் தொழும்புக் கெதிர்நிற்கும், அங் கண்ணரசைத் தொழுதெழுந்து திளைத்துத் திருநாவுக்கரசர்", "பண்ணார் பதிகத்தமிழ் பாடிப் பணிந்து பரவிப் பணி செய்தார்" எனக் கூறுவதிலிருந்து மலையினுச்சியில் ஒரு சிவலிங்கம் இருந்ததென்றும் அவ்விலிங்கமூர்த்தியைத் திரு நாவுக்கரசர் தரிசித்துத் தோத்திரஞ் செய்தாரென்றும் புலனு கின்றன. இவ்விலிங்கமூர்த்தி மலையினுச்சியில் இப்போது காணப்படாமையால் அடிவாரத்திலுள்ள திருக்கோயிலில் இவர் பிற்காலத்தில் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கக்கூடும். மலையையே இலிங்கமாகத் தொழுதார் என்று ஒருசாரார் இதற்குப் பொருள் கூறுகின்றனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவண்ணாமலையினைத் தரி சித்திருத்தல்கூடும். ஆனால் பெரிய புராணத்துள் இதைப் பற்றி வெளிப்படையான குறிப்பில்லை. இத்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் கிடைத்திலது. ஊர்த்தொகை என்ற திருப்பதிகத்துள் ஏழாவது பாடலில் "ஆனைக்காவில் அரனே பரனே அண்ணாமலையானே" என்ற குறிப்பு காணப்படுகின்றது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் திரு வெம்பாவை, திருவம்மானை எனும் இரண்டு பதிகங்களைப் பாடியுள்ளார். இஃதன்றித் திருவாசகத்துள் திருவண்ணா மலையைப்பற்றி வேறு பல குறிப்புக்களுமுண்டு. மார்கழி மாதத்தில் விடியற்காலையில் குளத்தில் நீராடச் செல்லும் பெண்கள் ஒருவரையொருவர் எழுப்பிக் கூட்டமாக இறை வன் புகழைப் பேசிக்கொண்டு செல்வதைப் பல சாத்திரக் கருத்துக்களோடு மிக அழகாகக் கூறுவது திருவெம்பாவை. இதனுள் "அண்ணாமலையா னடிக்கமலம் சென்றிறைஞ்சும்", "மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்போ லறி

வோம்" என்ற குறிப்புக்கள் திருவெம்பாவை திருவண்ணா மலையில் பாடப்பெற்றமைக்குரிய சான்றாகும்.

நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்தார் ஆகிய நால்வருடைய திருவாக்கினில் அண்ணாமலைபற்றிய குறிப்புக்கள் பதினொராந் திருமுறையுள் காணப்படுகின்றன.

வச்சிராங்கதன் என்ற பாண்டியன் வேட்டையாடும் போது ஒரு குதிரையின்மீது ஏறி ஒரு புழுகு (புனுகு) பூனையைத் துரத்தினான். அது அண்ணாமலையை வலம் வந்து இறந்தது. அதனைத் துரத்தி வந்த தனது குதிரையும் விழுந்து இறந்தது. இவ்விரண்டும் இறந்தவுடன் இரண்டு வித்தியாதரர்களாக மாறித் தாங்கள் ஆதியில் ஒரு ரிஷி சாபத்தால் பூனையாகவும் குதிரையாகவும் பிறந்து திருவண்ணாமலையை வலம் வந்த காரணத்தால் சாபம் நீங்கினமையை அறிவித்தன. பிறகு இதைக் கேட்ட வச்சிராங்கத பாண்டியன் தினந்தோறும் திருவண்ணாமலையை வலம் வந்து வேறு பல திருப்பணிகள் செய்து திருவருளால் தேவேந்திர பதவியைப் பெற்றான்.

வல்லாளமஹாராஜன் திருவண்ணாமலையைத் தனது தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். (இவனே ஹொய்சள வமிசத்தினைச் சார்ந்த மூன்றாம் வீரவல்லாளன் என்று கல்வெட்டு முதலிய சரிதச் சான்றுகள் கொண்டு ஊகிக்க இடமுண்டு.) இவன் அண்ணாமலை நாதரிடத்துச் சிறந்த பக்தியுடையவனாகவும் அடியார் வழிபாட்டில் உறைந்த அன்புடையவனாகவும் இருந்தான். சிவபெருமான் இவனுடைய அன்பின் மேன்மையை உலகத்தாருக்கு வெளிப்படுத்த எண்ணித் தாமே ஒரு துறவிவேடம்பூண்டு, தமது கணங்களையும் துறவிகளாக்கி அவர்களுடன் திருவண்ணாமலையில் வந்தார். தம்முடன் வந்த துறவிகளை அவ்வூரிலுள்ள விலைமாதர்கள் அனைவர் வீடுதோறும் ஒவ்வொருவராக அன்றிரவு முழுமை

யும் இருக்கச்செய்து தாம் அரசனிடஞ்சென்று இன்பந்துய்க்க ஒரு பெண் வேண்டுமென்று இரந்தார். அரசன் ஊர் முழுமை யும் ஒரு விலைமாது கொண்டுவர முயற்சித்தும் இறைவ னுடைய சூழ்ச்சியால் ஒருவரும் கிடைக்கப்பெருமல் மிக வருத்தமுற்றிருக்கும் வேளையில் அவனது இளைய மனைவி யாகிய சல்லமாதேவி யென்பாள் அவன்கொண்ட வருத்தம் நீங்கத்தாமே அந்தத் துறவியிடங் கலந்து இருக்க அனுமதி வேண்டினாள். அதற்கு அவன் இசைந்ததும் துறவியாகி வந்துற்ற இறைவனும் இளையதேவியும் பஞ்சணை சேர்ந்த காலத்து இளையதேவி கரங்கள் பட்டவுடன் இறைவன் குழந்தையாயினன். இளையதேவியும் துண்ணென நடுங்கிப் பின்னர் இன்பமுற்றவளாய்த் தனது நாயகனான வல்லாளனை யழைத்துக் குழந்தையைக் கையில் கொடுக்கவும் குழந்தை மறைந்தது. உடனே வானத்தில் "உமக்குக் குழந்தையில் லாமையால் யாம் இவ்வாறு வந்து மறைந்தோம். உமக்கு அந் தியகடன்கள் யாமே செய்வோம்" என்று ஒலிபெருகியவுடன் இடபாரூடராய் அவர்கட்கு இறைவன் காட்சிகொடுத் தருள் செய்தார். இக்காலத்திலும் வருடந்தோறும் (மாசி மாதத்தில்) வல்லாளன் உத்தரகிரியை உற்சவம் நடைபெறுகின்றது.

சூரியன், பிரதத்தராஜன், அஷ்டவசுக்கள், பிரமதேவன், சந்திரன், திருமால், புளகாதிபன் முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற வரலாறுகள் அருணாசல புராணத்துள் காணப் பெறும்.

திருவண்ணாமலையில் கோயிலுக்குள்ளும் வெளியிலும் மலைவலம் வரும் வழிகளிலும் 360 தீர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் சிறந்தவை கோயிலுள்ளிருக்கும் சிவகங்கையும் பிரம தீர்த்தமும் மலைவலத் தொடக்கத்திலிருக்கும் அக்னி தீர்த்தமும் தெப்போற்சவம் நடக்கும் இந்திர தீர்த்தமும் ஆகும். இத்தீர்த்தங்களின் பெருமையை அருணாசல புராணத்துட் காண்க.

## அருணகிரிநாதர் வரலாறு

திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவகுப்பு முதலிய முருகப்பெருமான் திருவடிப்புகழ் நூல்கள் பலவற்றை அருளிச்செய்த அருணகிரிநாதர் சரித்திரம் பற்பல வாறாக வழங்கப்பட்டு வருகின்றது. இவருடைய காலம் கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டின் இடைப்பகுதியென்று இவர் பிரபுடதேவ மாராயனைப்பற்றிக் கூறுவதிலிருந்து விளங்குகின்றது. இவருடைய முற்பிறப்பு, தாய் தந்தையர், இளம் பருவச் செய்திகள் முதலியவற்றைப்பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் உண்டு. இவர் திருவண்ணாமலையில் உதித்து அத்தலத்திலே வசித்திருந்து சிறந்த குகபக்தராகப் பல பாடல்களைப்பாடி முருகனுடைய திருவருளை நிரம்பப் பெற்றனரென்பது எவரும் மறுக்க வொண்ணாதது. இவர் திருவருணைக் கோபுரங்களுள் ஒன்றன் மீதேறித் தற்கொலை செய்துகொள்ளும் வேளையில் முருகவேள் தோன்றிக் காப்பாற்றி இவருக்கு உபதேசஞ் செய்த வரலாறு இவருடைய பாடல்களிலுள்ள அகச்சான்றுகளினால் கிடைக்கின்றது. இவர் பலதலங்கள் சென்று முருகப்பெருமானைத் தோத்திரஞ்செய்து திருவடி முத்தியெய்தினார். இவருடைய சரித்திரத்தை இப்போது வழங்கிவரும் பலதிருப்புகழ்ப் பதிப்புக்களின் முகவுரையிற் பரக்கக்காணலாம்.

## குகைநமச்சிவாயர் குருநமச்சிவாயர்

சில நூற்றாண்டுகளுக்குமுன் திருவண்ணாமலையில் குகைநமச்சிவாயர்என்ற சைவப்பெரியார் அற்புதமானசித்தியெய்தி விளங்கினார். அவரிடத்தில் நமச்சிவாயர் என்ற சீடர் இருந்தார். அவர் தம் இருப்பிடத்திலிருந்தே ஞான திருஷ்டியால் திருவாரூரில் ஒருவிழாவில் ஒரு உருத்திரகணிகை வீதியில் வழுக்கி விழுந்தது, சிதம்பரத்தில் கனகசபையில் திரைச்சீலை

யில் நெருப்புப் பற்றியது, முதலிய பல விஷயங்களைத் தெரிந்து கொண்டார். இவற்றையறிந்த குகைநமச்சிவாயர் தமது சீடர் தம்மினும் மேம்பட்ட பக்குவம் எய்திருப்பதை உணர்ந்து அவரைத் தில்லைக்கேகும்படி கட்டளையிட்டார். இச்சீடருக்குக் குருநமச்சிவாயர் என்ற பெயரும் ஏற்பட்டது. இவர்களுடைய சரிதங்கள் அருணாசல புராணத்தின் அநுபந்தங்களாக இப்போது வழங்கும் பதிப்புக்களில் நிலவுகின்றன. இவர்களது ஆதீனம் வீரசைவ மடமாகத் திருவண்ணாமலையில் இற்றைக்கும் தொண்டுசெய்து வருகின்றது. குகைநமச்சிவாயர் இயற்றிய நூல்களுள் மிகச்சிறந்தது அருணகிரி யந்தாதி. குருநமச்சிவாயர் இயற்றியவைகளுள் மிகச்சிறந்தது அண்ணாமலை வெண்பா.

## கல்வெட்டுக்களின் சாரம்

இக்கோயிலில் நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் (=சிலாசாஸனங்கள் = Inscriptions) உள்ளன. இவற்றுள் பலவற்றை அரசாங்கத்துத் தென்னிந்திய கல்வெட்டுப் பதிவு நிலையத்தினர் (Department of Epigraphy, Madras Circle) படியெடுத்துள்ளனர். அவை A. R. Nos. 469 to 574 of 1902, 419 to 428 of 1929 என்று எண்ணிடப் பட்டுள்ளன. இவற்றுள் 469 to 574 of 1902 என்ற எண்ணுள்ள கல்வெட்டுக்களின் மூலம் தென்னிந்திய கல்வெட்டுக்களின் எட்டாவது தொகுதியில் 57 முதல் 165 வரையுள்ள எண்ணுடன் (South Indian Inscriptions Vol. viii Nos. 57 to 165) வெளிவந்துள்ளது.

மேற்கூறியவாறு அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்பட்டுள்ள 119 சாஸனங்களுள் பெரும்பாலன சோழமன்னர்கள் காலத்து ஏற்பட்டவை. இவை கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து பதின் மூன்றாவது

நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலுள்ள நானூறு வருஷங்களில் திருவண்ணாமலையுடைய மகாதேவர்க்கு அரசர் வணிகர் வேளாளர் முதலிய பல வகுப்பினர் திருவிளக்கேற்றல், திருமஞ்சனம், திருநந்தனவனம், திருவமுது, திருவெழுச்சி, அடியவர்க்கு அமுதளித்தல் முதலிய பல வகையான அறங்கட்காக நிலம், பொன், கால்நடை முதலியவற்றை நன்கொடையாக அளித்த நற்செய்திகளைக் கூறுகின்றன. இவைகளேயன்றிப் பாண்டிய மன்னர் காலத்திய சாஸனங்கள் சிலவும், சோழர் ஆட்சியில் ஒரு குறுநில மன்னனாக விருந்து, பிறகு சோழநாட்டின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய கோப்பெருஞ் சிங்கன் எனும் பல்லவன் காலத்திய சாஸனங்களும், ஹொய்சள (Hoysala) மன்னரான வீரவல்லாள தேவர் காலத்திய சாஸனங்களும், விஜயநகரத்து ராயர்கள் காலத்திய சாஸனங்களும், தஞ்சாவூர் நாய்க்க மன்னர்கள் காலத்திய சாஸனங்களும் இக்கோயிலின் சுவர்களில் காணப்படுகின்றன. இவற்றின் காலம் பதின்மூன்றாவது நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து பதினாறாவது நூற்றாண்டினிறுதி வரையாகும். இக்காலத்தில் மிகச் சிறந்த திருப்பணிகள் செய்தவர் கோப்பெருஞ்சிங்கர், கிருஷ்ண தேவ ராயர், செவ்வப்ப நாயகர் ஆகிய மூவரே யாவர்.

இக்கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறியக்கூடிய செய்திகள் கீழ்வருவனவாகும்.

1. முதல் இராஜேந்திர சோழன் (1038 கி. பி.) காலத்தில் திருவண்ணாமலை மதுராந்தக வளநாட்டுப் பெண்ணை வடகரைத் திருவண்ணாமலை யென்றும், மூன்றாம் குலோத்துங்கனுடைய இரண்டாம் ஆட்சி யாண்டில் (கி. பி. 1179) இராஜராஜ வளநாட்டு வாணகோப்பாடிப் பெண்ணை வடகரை அண்ணாநாட்டுத் திருவண்ணாமலை யென்றும், மேற்படி

சோழனுடைய இருபத்தேழாவது ஆட்சி யாண்டில் (கி. பி. 1204)வாணகோப்பாடிப் பெண்ணை வடகரை அண்ணாநாட்டுத் திருவண்ணாமலை யென்றும், விஜயநகர் இராயர்கள் காலத்தில் (கி. பி. பதினைந்து பதினாறும் நூற்றாண்டுகளில்) ஜெயங் கொண்ட சோழமண்டலத்துச் செங்குன்றகோட்டத்துப் பெண்ணை வடகரை வாணகோப்பாடி யண்ணாநாட்டுத்தனியூர் திருவண்ணாமலை என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து திருவண்ணாமலையை உள்ளடக்கிய பெருநிலப் பகுதியாகிய வளநாட்டின் பெயர் முதலில் மதுராந்தக வளநாடு என் றிருந்து, பிறகு இராஜராஜ வளநாடு என்று மாறி இறுதியில் ஜெயங்கொண்ட சோழமண்டலமாக ஆயிற்று என்றும், இம் மண்டலத்தின் உட்பிரிவாகிய செங்குன்றக்கோட்டத்தினுள் அண்ணாநாட்டுத் தனியூராக இது குறிக்கப்பட்டதென்றும் அறியக் கிடக்கும். ஜெயங் கொண்ட சோழமண்டலம் என் பது பெரும்பாலும் தொண்டைநாட்டினையே குறிப்பதாக அறிஞர்கள் கொள்வதாலும் பிற்காலத்து ஆன்றோர்கள் திரு வண்ணாமலையை நடுநாட்டுத் தலங்கள் இருபத்திரண்டனுள் ஒன்றாக எண்ணுவதாலும் ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்ற பெருநிலப்பகுதி தொண்டைநாடோடு நடுநாட்டின் ஒரு பகுதியை அடக்கியிருந்ததென்றேனும் திருவண்ணா மலை முதலில் தொண்டைநாட்டுத்தலமாக விருந்து, பின்னர் நடுநாட்டுத்தலமாக எண்ணப்பட்டதென்றேனும் கொள்ள வேண்டி யிருக்கிறது. இது பேரறிஞர் ஆராய்ச்சிக்குரிய சிறந்த பொருளாகும்.

2. திருவண்ணாமலைத் திருக்கோயிலில் கி. பி. 850-ம் வருடத்திற்கு முந்திய கல்வெட்டு ஒன்றேனும் காணப்படா மையால் திருஞானசம்பந்த சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தலத்தைத் தரிசித்துத் தேவாரப் பதிகங்கள் அருளிய காலத்தில் இத்திருக்கோயில் கருங்கல் திருப்பணி

யாகாது செங்கற்சுதை மாடமாக இருந்ததென்று ஊகிக்க இடமுண்டு. இவ்விரு சமய குரவர்கள் அண்ணுமலையாரை வணங்கிய செய்தியைச் சேக்கிழார் பெரியபுராணத்துட் கூறுவதைக் கூர்ந்து நோக்கிஞல் அக்காலத்தில் மலையின்மீது அண்ணுமலையார் திருக்கோயிலிருந்ததென்று கூறவேண்டியிருக்கிறது.

3. இக்கோயிலில் பல்லவ மன்னர் காலத்திய சாஸனம் ஒன்றும் கிடைக்காமையால் இத்திருக்கோயிலின் கருங்கற்றிருப்பணி சோழன் விஜயாலயன் வமிசத்துதித்த முதல் மன்னர் காலத்தில் முற்றுப்பெற்றிருக்க வேண்டுமென்று ஊகிக்க இடமுண்டு.

4. இக்கோயிலில் மிகப்பழைமையான சாஸனங்கள் அண்ணுமலை நாதர் கருப்பக்கிரகத்துச் சுவர்களில் மட்டுமே காணப்படுகின்றமையானும் சிறிது பிற்காலத்திய சாஸனங்கள் முதற்பிரகாரத்துச் சுவர்களில் (இக்கோயிற் படத்தின் படி 2-ம் பிரகாரத்துச் சுவர்களில்) காணப்படுகின்றமையானும் மிகவும் பிற்காலத்திய சாஸனங்கள் கிளி கோபுரம், வல்லாள கோபுரம், கிழக்குச் சந்நிதி பெரியகோபுரம், மேற்குப்புறமுள்ள பேய் கோபுரம், ஆயிரக்கால் மண்டபம் முதலிய இடங்களில் காணப்படுகின்றமையானும் இப்போது நாம் தரிசிக்கும் கோயிலின் பல பகுதிகள் எவ்வெக்காலங்களில் ஆக்கப்பட்டனவென்பதை ஊகிக்க இடமுண்டு.

5. முதற்பிரகாரத்துச் சுவர்களில் (அதாவது இக்கோயிற்படத்தில் இரண்டாம்பிரகாரம் எனப்படுவதின் சுவர்களில்) கோப்பரகேசரி, கோராஜகேசரி, மதுரைகொண்ட கோப்பரகேசரிமுதற் பராந்தகன், வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி ஆதித்ய சோழன் முதலியவருடைய சாஸனங்கள் எவையும் காணப்பெறுமையால் முதற் பராந்தகன் குமாரஞகிய இராஜாதித்ய சோழன் காலம் வரை

யில் (கி. பி. 955) கருப்பக்கிரகம் மட்டுமே கற்றிருப்பணி யாக இருந்ததென்றும் முதற்பிரகாரம் கற்றிருப்பணி ஆகவில்லையென்றும் ஊகிக்க இடமுண்டு.

6. மேற்கூறிய முதற்பிரகாரத்துச் சுவரில் கங்கை கொண்ட சோழன் என்று புகழப்படும் முதல் இராஜேந்திர சோழனுடைய 18-வது ஆட்சியாண்டின் (கி. பி. 1028) கல்வெட்டு காணப்படுவதால் அக்காலத்துக்கு முன்பே முதற் பிராகாரத்துக் கருங்கற்றிருப்பணி முடிவுற்றதென்று உறுதியாய்க் கூறலாம். எனவே இத்திருப்பணி 10-வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினோராவது நூற்றாண்டின் முற்பகுதியிலும் நடைபெற்றிருத்தல் வேண்டும். இம்முதற் பிரகாரத்துச் சுவர்களில் இராஜேந்திர சோழன் சாஸனங்களேயன்றி மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன், கோப்பெருஞ்சிங்கன், குலசேகர பாண்டியன் முதலியோருடைய சாஸனங்களும் காணப்படுவதால் பல நூற்றாண்டுகளாக இப்பிராகாரத்துச் சுவர்கள் மிகச்செம்மையான நிலையில் இருந்தனவென்றறியலாம்.

7. முதற்பிரகாரத்தில் விளங்கும் ஏகாம்பரநாதர் கோயில், சிதம்பரேசர் கோயில் ஆகிய இரண்டின் சுவர்களிலும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் சாஸனங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சிதம்பரேசர் கோயிலில் வீர இராஜேந்திர சோழர் காலத்திய கல்வெட்டு ஒன்று (கி. பி. 1062—1070) காணப்படுவதால் இக்கோயில் மேற்குறித்த காலத்திற்கு முன்னர் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏகாம்பரநாதர் கோயிலில் விஜயராஜேந்திர சோழர் காலத்திய கல்வெட்டு காணப்படுகின்றது. இவர் வீரராஜேந்திர சோழரே என்றுகொண்டால் இக்கோயிலும் சிதம்பரேசுரர் கோயிலுடன் கட்டப்பட்டதாகும்.

8. கிளிகோபுரத்துச் சுவர்களிலுள்ள முப்பத்துமூன்று சாஸனங்களுள் மிகப்பழைமையானது வீரராஜேந்திர சோழருடைய இரண்டாவது ஆட்சியாண்டில் (கி. பி. 1063) ஏற்பட்டது. இதிலிருந்து அக்கோபுரவாயில் கருங்கற்றிருப்பணியாக மேற்கூறிய யாண்டுக்கு முன்னரே முடிவுபெற்றிருத்தல் வேண்டும் என்று கூறலாம்.

9. மேற்கூறியவற்றிலிருந்து அண்ணுமலை நாதருடைய கருப்பக்கிரகம் கி. பி. 850-ம் ஆண்டுக்கு முன்பும் முதற் பிரகாரம் கி. பி. 1028-ம் ஆண்டுக்குமுன்பும் சிதம்பரேசர் ஏகாம்பரநாதர் கோயில்கள் கிளிகோபுரம் முதலியன கி. பி. 1070-ம் ஆண்டுக்கு முன்பும் கருங்கற்றிருப்பணிகளாக நிறைவேறியிருத்தல் வேண்டுமென்று கூறலாம்.

10. திருக்காமக் கோட்டமுடைய உண்ணுமுலை நாச்சியாரைப்பற்றிய குறிப்பு ஏதொன்றும் மூன்றுங்குலோத்துங்க சோழனுடைய இரண்டாவது ஆட்சியாண்டிற்கு (கி. பி. 1179) முன்பு காணப்படாமையினுல் அக்கோட்டம் தனிக்கோயிலாகப் பன்னிரண்டாம் நூற்றுண்டில் அமைக்கப்பட்டிருத்தல் கூடும். வேறுபல தலங்களில் காணப்படும் திருக்காமக் கோட்டங்களைப்பற்றிய குறிப்புக்களும் இதனை வலியுறுத்தும். அம்மன் கோயில் தனியே கட்டப்பட்டிருந்தால் அதைத் திருக்காமக்கோட்டம் என்று கல்வெட்டுக்களில் குறிப்பது அக்காலத்திய வழக்கம்.

11. இக்கோயிலின் திருமதில்கள் சிலவற்றிற்குப்பெயர்கள் வழங்கப்பட்டன என்று பதின்மூன்றுவது நூற்றுண்டின் நடுப்பகுதியில் எழுந்த சாஸனங்களின் மூலம் அறியலாம். வீரரகரன் திருமதில், வாணுதராயன் திருமதில், திருவேகம்பமுடையான் திருமதில் முதலியன அப்பெயர்களாம்.

12. அண்ணுமலைநாதர் சந்நிதிக்கும் உண்ணுமுலை நாச்சியார் சந்நிதிக்கும் இடையில் மேற்குப்பாகத்தில்

நங்கையாழ் வீசுவரம் என்ற ஒரு சிறுகோயில் பல்லவ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அரசியால் கி. பி. 1269-ம் ஆண்டில் எடுப்பிக்கக் கோயிலதிகாரிகள் பதினாயிரம் பொற்காசு பெற்றுக்கொண்டு பதினாலடிக்கோலால் பதின்மூன்றரைகுழி நிலம் விற்றசெய்தியை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இப்போது அச்சிறு கோயில் காணப்படவில்லை.

13. மேற் கூறிய ஏகாம்பரநாதர் சிதம்பரேசர்கோயில்கள் தவிர அவைகளின் அருகிலுள்ள காளத்திநாதர் ஜம்புகேசுவரர் கோயில்கள் கட்டப்பட்டகாலம் சாஸனங்கள்மூலம் அறியவாராமையானும் இந்நான்கு கோயிற் பெயர்கள் நமக்குக் கிடைத்த சாஸனங்களில் குறிக்கப்படாமையானும் இத்திருக்கோயிலில் பஞ்சபூத ஸ்தலங்களின் ஞாபகார்த்தமாகச் சிறுகோயில்களின் பெயர்கள் வழங்கப்பட்டகாலம் இஃதென்பதை உறுதியாகக் கூறவியலாது.

14. இக்கோயிலில் ஹொய்சள வமிசத்தைச் சார்ந்த மூன்றாம் வீரவல்லாள தேவர் காலத்தில் அவருடைய தண்டநாயகர் (சேனைத்தலைவர்) சாலிவாகன சகாப்தம் 1262-ல் (கி. பி. 1340) செய்த தானங்கள் குறிக்கப்படுகின்றன. இச்சாஸனங்கள் இப்போது வல்லாளகோபுரம் என்று வழங்கப்பெறும் கோபுர வாயிற் சுவர்களில் காணப்படாமையானும் சகாப்தம் 1299 (கி. பி. 1377) ஏற்பட்ட சாஸனமே மிகப் பழையதாய் இக் கோபுர வாயிலில் காணப்படுகின்ற காரணத்தானும் கி. பி. 1340-ம் வருஷத்திற்குப் பின்னும் கி. பி. 1377-ம் வருஷத்திற்கு முன்னும் இக்கோபுர வாயில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறிய வீரவல்லாள தேவரோ அல்லது அவருக்குப்பின் வந்தவர்களோ அவரது நினைவுக் குறியாக இதைக் கட்டியிருக்க வேண்டும். மேற்கூறிய இந்த வாயில் வீரவல்லாளன் திருவாசல் என்றே சகாப்தம் 1299ல் எழுந்த சாஸனத்தே அழைக்கப்படுகின்றது.

15. இரண்டாம் பிராகாரத்து மேலைக் கோபுர வாயிற் சுவரில் கி. பி. 1388 ம் ஆண்டு சாஸனமும் மூன்றாம் பிராகாரத்து மேலைக் கோபுரவாயில் (பேய் கோபுரம்) சுவரில் கி. பி. 1374-ம் ஆண்டு சாஸனமும் காணப்படுவதால் இரண்டு மூன்றும் பிராகாரங்களும் கோபுர வாயில்களும் கி. பி. 14 ம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும். இவை நான்காம் ஐந்தாம் பிரகாரங்களென்று இத் திருக்கோயிற் படத்தில் குறிக்கப் பட்டுள்ளன.

16. விஜய நகர வமிசத்தவருள் மிகக் கீர்த்தி வாய்ந்த கிருஷ்ணதேவராயர் ஆயிரக்கால் மண்டபத்தையும் அதன் எதிரிலுள்ள திருக்குளத்தையும் பதினொரு நிலையுள்ள கோபுரத்தையும் வேறு பல திருப்பணிகளையும் சாலிவாகன சகாப்தம் 1438 (கி. பி. 1516)-ல் செய்த விபரங்கள் ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள ஒரு சாஸனத்தில் கூறப்படுகின்றன.

17. கிழக்கு வாயிலாகவுள்ள பதினொரு நிலைப் பெரிய கோபுரத்தைச் சாலிவாகன சகாப்தம் 1512 (கி. பி. 1590)-ல் செவ்வப்ப நாய்க்கர் (தஞ்சை நாய்க்கர் மன்னருளொருவர்) கட்டி முடித்து, ஸ்தூபிகலசங்கள் வைத்த செய்திகள் கோபுரத்திலுள்ள பல சாஸனங்களின் மூலம் தெரியவருவதால் இக்கோபுரத் திருப்பணி கிருஷ்ண தேவராயர் காலத்தில் தொடங்கப்பெற்றுச் செவ்வப்ப நாய்க்கர் காலத்தில் முடிவடைந்ததென்று ஊகிக்கலாம்.

18. பிற்காலத்திய பல்லவ அரசனான கோப்பெருஞ்சிங்கனும் அவனுடைய மகன் வேணுவுடையானும் செய்த மிகச் சிறந்த திருப்பணிகள் பலவற்றையும் மிக அழகாக எடுத்துக்கூறும் ஒரு ஆசிரியப்பா இத்திருக்கோயில் முதற் பிராகாரத்து மேலண்டை சுவரில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலத்தை இந்நூல் (38-41) பக்கத்தில் காண்க. இக்

கோப்பெருஞ்சிங்கன் இவையல்லாமல் திருவண்ணாமலையுடைய நாயனார்க்குப் பூஜைக்கும் திருப்பணிக்கும் உடலாக "அண்ணாமலைநாதர் தேவதானப்பற்றுகளும் அண்ணாநாடு, நாற்பாக்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் ஆகவுள்ள நிலத்திற்கு ஆயம், பாடி காவலால் வந்த நெல்லும் காசாயமும், மற்றும் எப்பேர்ப்பட்ட பல்லாயங்களும்" தானமாகக் கொடுத்த செய்தியை ஒரு சாஸனம் கூறுகின்றது. இவ்வாறே பல சிற்றரசர்களும், அரச குடும்பத்தைச் சார்ந்த பெண்மணிகளும் பல தானங்கள் செய்த விபரங்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

19. சிலாசாஸன காலத்தில் இக்கோயில் அதிகாரிகள் பலர் இருந்தனர். இவர்கள் ஸ்ரீருத்திரர், ஸ்ரீமாஹேசுரர், ஸ்ரீமாஹேசுரக் கண்காணி செய்வார், தானத்தார், தானபதி மாஹேசுரர், தேவகன்மிகள், கோயிற்கணக்கர், ஸ்ரீகார்யஞ் செய்வார் என்று பலதிறப்படுவர். இக்கோயில் சாஸனங்களில் காணப்படும் தர்மங்களைப் பாதுகாத்து அவைகள் ஒழுங்காக நடைபெறுவிடில் அவைகளைப் பற்றிக் கேள்வி கேட்கும் உரிமை பெற்றவர்களாக விளங்கியவர் ஸ்ரீமாஹேசுரரே ஆவர். சாஸனங்களினிறுதியில் பன்மாஹேசுர ரக்ஷை என்ற குறிப்பே பெரும்பாலும் காணப்பெறும். அரசப் பிரதிநிதிகள் அவ்வப்போது கோயிற் கணக்குகளைப் பரிசோதித்து வந்தனர்.

20. இக்கோயிலின் நிர்வாகம் சாஸன காலத்தில் மிகச் செம்மையாக நடைபெற்றதென்பதைச் சில செய்திகள் மூலம் அறியலாம். திருக்கோயில் மடை விளாகத்தில் எடுப்பாயிருந்த மனைகளை விற்குமிடத்துப் பண்டாரக் கண்காணி நிச்சயித்த விலையில் கோயிலுக்குச் செம்பாதியும் மனையுடையவனுக்குச் செம்பாதியும் கொடுப்பதென்றும் கோயிலுக்குச் சேரவேண்டிய தொகை சேர்ப்பிக்கப் படாவிடில் மனையுடைய

வன் இரட்டிப் பொருள் கொடுப்பதோடு மனையையும் இழக்க வேண்டுமென்றும் ஒரு சாஸனம் கூறுகின்றது. கோயிலுக்குச் சேரவேண்டிய தொகையை ஒரு தொண்டன் எடுத்துக் கொண்டான். அவனிடத்திலிருந்து தொகையும் தண்டமும் கைப்பற்றிய செய்தியை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கின்றது. திருக்கோயில் சந்திவிளக்கு நந்தா விளக்கு கைங்கரியங்களுக்காக விடப்பட்ட ஆடுமாடுகளின் நிலைமையை அவ்வப்போது பரிசோதித்துத் திருவிளக்கு மன்றாடிகளில் தகுதியற்றவர்களை நீக்கித் தகுதி யுள்ளவர்கள் வசம் பங்கிட்டுக் கொடுக்குஞ் செய்தியை வேறொரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.

21. இக்கோயிலில் பூஜைசெய்யும் பட்டர்களுக்கும், அத்யயனம் செய்யும் அந்தணர்களுக்கும் பெரிய திருப்பாட்டு ஓதுவார்களுக்கும், தானங்கள் செய்யப்பட்ட சாஸனங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் தேவரடியார் பலர் தொண்டுசெய்து வந்தனர். கோப்பெருஞ் சிங்கதேவர் 21-வது ஆட்சியாண்டில் (கி. பி. 1264) இரண்டு தெருக்களில் தேவரடியார் இருபத்து நால்வர் இருந்த செய்தியை ஒருகல்வெட்டு குறிக்கின்றது. தேவரடியார் பலர் கோயிலுக்குத் தானங்கள் செய்த விபரங்கள் சாஸனங்களில் காணப்படுகின்றன. தேவரடியாருக்கு மானியமாக விடப்பட்ட நிலங்களிலிருந்து எவ்விதமான வரியிறைகளும் கேட்கப்படாதென்று ஒரு சாஸனம் குறிக்கின்றது.

22. இக்கோயிலில் திருவீதிகளைச் செம்மையான நிலையில் வைத்திருப்பதற்கென்று திருவீதியாண்டார்கள் இருபதின்மர்க்கும் இவர்களுக்கு நாயகமான இருவருக்கும் நிலம் தரப்பட்ட செய்தியை ஒரு சாஸனம் குறிக்கின்றது. வேறு பல கோயில் சாஸனங்களில் காணப்படுவது போலவே இக்கோயில் திருவீதியாண்டார்களுடைய திருப்பணியும்

திருவதிகை செய்தபடி செல்வதாகவும், என்று குறிக்கப்படு கின்றது. இதிலிருந்து அக்காலத்தில் திருநாவுக்கரசருடைய உழவாரத் தொண்டைத் தமிழ் மக்கள் எத்துணை மேன்மை யாகப் போற்றினார்கள் என்பது அறியக்கிடக்கின்றது.

23. திருவண்ணாமலையில் இராஜேந்திர சோழர்* காலத் தில் கார்த்திகைத் திருவிழா, பங்குனித் திருவிழா ஆக விரண்டும், மூன்றாங் குலோத்துங்கசோழர் காலத்தில் அவை களோடு தை மாதத்தில் ஒரு திருவிழாவும் நடைபெற்ற செய்திகளைப் பல சாஸனங்கள் கூறுகின்றன. இவ்விழாக் களுள் மிகச் சிறப்பாக (இக்காலத்துள்ளதுபோல்) அக்காலத் தில் விளங்கியது கார்த்திகைத் திருவிழாவே. இத்திருவிழாக் களில் சேவிக்க வரும் சிவயோகியர்கள் புறத்தடியார்கள் முதலியோருக்குச் சட்டிச்சோறு உணவு முதலியவற்றைக் கொடுப்பதற்கு ஏற்பட்ட தானங்களின் விபரங்கள் பல சாஸ னங்களில் காணப்படுகின்றன. கார்த்திகைத் திருவிழாவில் திருவேட்டை எழுந்தருளுகின்ற நாளில் பெருந் திருவமுது செய்வதற்கு ஏற்பாடு இருந்தது. இத்திருவிழாவில் கார்த்திகை நாளில் (நடராஜர்) ஆடவல்லாருக்குச் சாத்தியருள சாந்தும் அவர் எழுந்தருளும்போது தூவ சாந்தும் சமர்ப்பிக்கத் தானங்கள் ஏற்படுத்தப்பட்டன. மூன்று திருநாளுக்கும் கொடிப்புடவை தருவதாகத் தருமவாணியர்கள் சாஸனஞ் செய்துள்ளனர். தைத்திருநாளில் திருவண்ணாமலைக்கருகி லுள்ள பல கோயில்களிலிருந்து திருக்கொடியேற்றத்தி லிருந்து பத்து நாள் வரையிலும் சண்டேசுரர், சுந்தரர் முத லிய நால்வருள் ஒருவரை எழுந்தருளப் பண்ணித் தேவரடி யார் முதலிய பரிவாரங்களுடன் வந்து சேவிக்க வேண்டு மென்றும் சேவாபராதம் நேர்ந்தால் அபராத காணிக்கை வருஷம் ஒன்றுக்கு 120/- பொன் கொடுக்கவேண்டுமென் றும் விஜயநகர வமிசத்தைச் சார்ந்த இராஜபரமேஸ்வர

கஜவேட்டை கண்டருளிய ஸ்ரீ வீரப்பிரதாபதேவராய மஹாராயர் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. சித்திரை மாதத்தில் திருவசந்தனை திருவேகம்பமுடையான் திருநாளுக்கு நிலம் விட்ட செய்தியை ஒரு சாஸனம் கூறுகின்றது. உத்தராயன சங்கிரமத்திலும் தக்ஷிணாயன சங்கிரமத்திலும் சகஸ்ரகலசமாடியருளுகைக்கும்,பெருந்திருவமுது செய்தருளுகைக்கும் தானம் செய்யப்பட்டதை ஒரு சாஸனம் கூறுகின்றது. திருவாதிரையில் நெய்யாடியருள ஒரு தானம் செய்யப்பட்டுள்ளது.

24. தினந்தோறும் நடைபெறும் பூஜைகளில் அண்ணாமலை நாதருக்கும் உண்ணாமுலை நாச்சியாருக்கும் பிச்சதேவர் முதலிய மூர்த்திகட்கும் திருப்பள்ளியெழுச்சி, சிறுகாலை சந்தி, உச்சியாம்போது, இரவை, திருவர்த்தசாமம் முதலிய காலங்களில் திருமுழுக்கு, பாலாடியருளல், திருவமுது, பாலமுது, தயிரமுது, சந்தி விளக்கு, நந்தா விளக்கு, திருமேற்பூச்சு முதலியவைகட்குத் தானம் செய்யப்பட்ட விபரங்களைப் பல சாஸனங்கள் கூறுகின்றன. திருவண்ணாமலையுடையாருக்குப் பஞ்சகவ்வியம் ஆடியருள நித்தமும் சிறுகாலை சந்தியில் திருவண்ணாமலை என்னும் நாழியால் கோமூத்திரம் உழக்கும், கோமயம் ஆழாக்கும், பால் நாழிஉழக்கும், தயிர் நாழிஉரியும், நெய் நாழியும் ஆகக் கலந்து தருவதற்கு ஒரு நிபந்தம் ஒரு சாஸனமூலம் அறியக்கிடக்கின்றது. இஃதேயன்றிப் பெருஞ்செல்வர்கள் தங்கள் பேரால் ஏற்படுத்திய சந்திக் கட்டளைகள் விபரங்களும் காணப்படுகின்றன. திருநீற்று வீரமாகத சோழன் சந்தி, கிருஷ்ணராய மாராயன் சந்தி முதலியவற்றின் விபரங்களைச் சாஸனங்களிற் காணலாம்.

25. சந்தான குரவர்களுள் முதல்வராகிய மெய்கண்டார் காலத்தை வரையறை செய்வதற்கு இக்கோயிலில் மூன்றும் இராஜராஜதேவருடைய 16-ம் ஆட்சியாண்டில் (கி. பி. 1232) ஏற்பட்ட கல்வெட்டு ஒன்று பேருதவி செய்கின்றது.

26. பண்டைக் காலத்தில் வேட்டைக்குச் செல்பவர்கள் மிருகத்தையெய்த அம்பு மக்கள்மீது விழுந்து மக்கள் இறக்க நேரிடின் அக்கொலைக்குக் கழுவாயாகத் திருக்கோயிலில் விளக்கேற்றி வைக்கும் வழக்கம் இருந்ததைச் சில கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

27. சில சாஸனங்களில் பிரமநாயனர் பெரிய மடத்து முதலியார், வையங்தொழுதார் பெரிய மடத்து முதலியார், ஊருக்குப் பெரிய மடத்து முதலியார், திருவண்ணமலையுடையார் திருமுற்றத்தே ஸ்ரீ இராஜேந்திரசோழன் சாலை, காங்கேயன் மடம், அம்மை மடம் முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

28. கோயில் சுவர்களில் காணப்படும் சாஸனங்களில் கோயிலைப்பற்றிய தானங்களேயன்றிப் பொதுவான பல விஷயங்களும் அக்காலத்திய பழக்க வழக்கக் குறிப்புக்களும் காணப்படுவதுண்டு. இம்முறையிலே திருவண்ணமலைத் திருக்கோயிலிலும் சில சாஸனங்களுள்ளன. சமீபகாலம் வரையில் தமிழ் மக்களுள் வலங்கை இடங்கை என்ற பிரிவினையும் இதுபற்றிய சச்சரவுமிருந்தது. விஜயநகர மன்னர் காலத்திய சகாப்தம் 1340 (கி. பி. 1418)ல் ஏற்பட்ட சாஸனம் ஒன்று " திருவண்ணமலைக்கு இடங்கை வலங்கை இல்லை திருவண்ணமலையில் இரண்டு தெருவில் கைக்கோளர்க்கு முன்பு பூர்வம் நடந்துபோந்த சங்கு, தண்டு, யானை, சாமரம், மற்றும் வலங்கைக்குள்ள வரிசைகளெல்லாம் நடக்கக்கடவதாகவும்" என்ற இராசகட்டளையைத் தெரிவிக்கின்றது.

29. சிற்றரசர்களுக்கும், சேனை யதிபர்களுக்கும் சில முக்கியஸ்தர்கள் எஜமான விஸ்வாசப் பிரமாணம் செய்து கொடுப்பதைச் சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

30. பல சாஸனங்களில் குறிக்கப்பெற்ற தருமங்களுக்கு இடையூறு செய்பவர்களைச் சபிக்கும் வகையில் பலமுறைகள் காணப்படுகின்றன.

"இது மாறினவன் கங்கையிடைக் குமரியிடைக் குராற் பசு கொன்றான் பாவங்கொள்வான்"; "மோவாய்புக்கு மூலை யெழுந்தானுமாய் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறந்தானு மல்லாதானுமாய் கோமாமிசத்தைப் புசிப்பானுமாய்", "தங்களம்மைக்குத் தானே மணாளன்", "எங்கள் மணாட்டிமாரைச் சக்கிலியர்க்குக் கொடுத்துப் பார்த்திருந்தோமாவோம்", "பெண்டிழந்தானுக்குச் செருப்பு மெடுத்துத் தம்பலமுந்தின்று அவன் காலடிக் கீழிருந்தாளுவான்", "மணாட்டியைப் பறையனுக்குக் கொடுப்பான்" "சமணருக்குக் குண்டிகை யெடுப்பான்", "சிவத்துரோகி, குருத்துரோகியாகக் கடவான்" என இவ்வாறு வருவன அக்காலத்தில் வழங்கப்பட்டன.


31. அக்காலத்திய விலைவிகிதம், வட்டிவிகிதம் முதலியவற்றைப் பல சாஸனங்கள் மூலம் அறியலாம். பெரும்பாலும் பண்டமாற்று முறையில் நெய், மிளகு, உப்பு, தயிர், அடைக்காய், வெற்றிலை, சீரகம், வாழைப்பழம், வாழையிலை முதலியன நெல்லையளந்து வாங்கப்பெற்றன. வட்டிவிகிதம் நூற்றுக்கு 25 வீதம் வரையில் உயர்ந்திருந்தது.

32. பொது அறங்களில் பெண்கள் ஈடுபட்டுப் பெருமையடைந்த ஒரு செய்தியை ஒரு சாஸனம் கூறுகின்றது. பஞ்சம் வந்துற்றகாலத்து ஒரு பொற் காசுக்கு உழக்கு அரிசி

விற்பதான நிலைவந்தபோது மங்கையர்க்கரசியார் என்னும் ஒரு நங்கையார் தாம் அணிந்திருந்த ஆபரணங்களனைத்தையும் ஈட்டிச் சேமித்திருந்த பொருளினையும், நெல்லையும் தந்து ஒருநதியினில் அணைகட்டி ஒரு புது ஏரியினை ஆக்கி உதவினார்கள். இந்த ஏரியைச் செம்மையாகப் பாதுகாப்பதற்கு ஏரிப்பட்டியாகக் கோயில் நிலத்தைக் கோயிலதிகாரிகள் விட்ட செய்தியை ஒரு சாஸனம் தெரிவிக்கின்றது.

மேற்கூறிய பல அருமையான பொருள்களும் இவை போன்ற வேறு பலவும் அரசாங்கத்தாரால் பதிவு செய்யப்பட்ட சாஸனங்களால் துலங்குகின்றன. அவர்களால் இன்னும் பதிவுசெய்யப்படாத சாஸனங்கள் இக்கோயிலில் மிகுதியாகவுள்ளன. இவைகளின் மூலம் வேறு பல அரிய செய்திகள் கிடைக்கக் கூடுமாகையால் திருவண்ணாமலை வாசிகளும் பிறரும் இவற்றை வெளிப்படுத்தும் முயற்சியில் விழைந்து மிக விரைவில் ஈடுபடுவது மிக்க நலமாகும்.

கல்வெட்டுக்களைப் படிப்பதால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. ஆயிரம் வருஷத்துக்கு முற்பட்ட பழக்க ஒழுக்கங்கள், நாகரிகநிலை, சுத்தமான தமிழ்ச் சொற்கள் வழக்கத்திலிருந்த நிலை, அரசர்களுடைய வீரச் செயல்கள், சுய ஆட்சி முறைகள், திருக்கோயில்களிற் சிறப்பாக நடைபெற்ற விழாக்கள் முதலிய பற்பல விஷயங்களைப் பற்றிய அருமையான பல குறிப்புக்கள் நமக்குக் கல்வெட்டுகளாற் கிடைக்கின்றன. இவற்றைச் செம்மையாகப் பயன்படுத்தி அறிவைப் பெருக்கிக் கொள்ளத் தமிழ்மக்கள் விரைவில் கற்றுக்கொள்ள வேண்டும். இத்துறையில் மிகக் கீர்த்தியோடு உழைப்பவர் ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திர செட்டியாரவர்கள். அவர்கள் நமக்கு மிகுந்த ஊக்கத்தை ஊட்டி வருகிறார்கள்.



துவஜஸ்தம்பமும் முகமண்டபமும்

## கோப்பெருஞ்சிங்கனும் அவன் மகன் வேணாவுடையானும் திருவண்ணாமலையிற் செய்த திருப்பணிகளைக் கூறும்

## கல்வெட்டு

**ஸ்வஸ்திஸ்ரீ**

கார் வளர்மேனிக் கமலக் கண்ணன்
பார்வள ருந்திப் பல்லவர் பெருமான்
சகல புவனச் சக்கர வர்த்தி
கூட லவனி யாளப் பிறந்தான்
கோப்பெருஞ் சிங்கன் குரைகழற் காடவன்
சொன்மறை யாக்கன் சுடர்வா ளெடுத்துப்
பின்வர நடந்து பிலந்திறந் தருளிய
காவலர் தம்பிரான் கண்ணா ரமுதர்
அருணை மால்வரைப் பெருமாள் தமக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத் துரைப்பிற்
காதிற் கம்பியுங் கதிர்மணி மகுடமும்
செங்கதி ரெறிக்கு மங்க சுத்தமும்
பாகு வலயமும் பைம்பொற் பலதொழில்
திருவுடை யாடையும் திருக்கழற் கீழிடும்
பேதை பாதமும் பிறங்கிருட் கண்டமும்
இளஞா யிற்றி னெழில்சிறந் தோன்ற
வளர்மா ணிக்க வாளிவெயி லரும்பிய
விரிகட லவனி யாளப் பிறந்தான்
திருவாசி கையும் சிங்கா சனமும்
கற்பக விருக்கமும் முத்தின் பந்தலும்
ஓடரி மைக்க ணுமையிசை பாடி
ஆடிய வதிருங் கழற் பெருமாளுக்
கினமா ணிக்கம் மிலங்கச் செய்த
பரதம் வல்ல பெருமா ளென்னும்
திருவா சிகையின் சிறந்தசெங் கதிரொளி
விளங்கு மாணிக்கமுந் துளங்கும் வைரமும்
கட்டிய பொலன்றரு கூடமஞ் சனமும்
கண்ணா ரமுதர் காமக் கோட்டத்
துண்ணா முலையா முமையவள் தனக்குப்
பருமணி நிரைத்த திருவுடை யாடையும்

வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியும் தேவியர் மேனியும்
மைஞ்ஞிறத் தோகை வண்ணமு மடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவும்
மல்லை காவலன் நிச்சங்க மல்லன்
பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூட லவனி யாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன்சிறந்
தூழி காலம் வாழி யிவன்மகன்
வாடா வாகைக் காடவர் குமாரன்
வான்புகழ் மல்லையும் மயிலையும் காஞ்சியும்
தண்டக நாடும் தண்புனற் பாலியும்
பெண்ணையும் கோவலும் மேவுகையு முடையவன்
எண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த
விருதரில் வீரன் விறல்வீ ராசனி
கரிய நாதன் காதற் குமரன்
குடதிசைக் கருநடர் தென்புலங் குலைக்கவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவர்
ஆரெயிற் சேர்ந்தூர் மலையர ணழித்து
நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வில்புக ழனைத்தும் மேம்படத் தங்கோன்
வாகையும் குரங்கும் விசயமுந் தீட்டிய
அடல்புனை நெடுவே லாட்கொண்ட தேவன்
கடகரி முனைமுகம் கடந்த காங்கயன்
கண்ணு ரமுதர் கனங்குழை யாகத்
தண்ணு மலையற் கன்புகெழு நெஞ்சில்
விருப்புடன் செய்த திருப்பணிக் கோவை
யாவையு மெடுத்துப் பாவல ருரைப்பில்
நின்ற தொல்புகழ் நிலமுழு தளித்த
வென்றி புனைதோ ளாட்கொண்ட தேவன்
வேணு வுடையா னென்னும் பெயரான்
நீணாள் வாழ நிலைபெறச் செய்த
பெருமா ளமருந் திருமண் டபமும்
மருக்கமழ் கனகத் திருப்பளி யறையும்
திருவமு தேற்றும் பெருமண் டபமும்

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

விரிவுடன் செய்த திருக்காக் கள்ளியும்
பெருவிற லவனி யாளப் பிறந்தான்
திருமண் டபமுஞ் செழுமலர் தொடுத்த
கண்ணிவா டாது கண்ணிமை யாது
மண்மிசை நடவா வானோர் வலம்வர
வெண்மதி நிலவில் விளங்குசுட ரெறிக்கும்
படித்தள மென்னவும் படிமூன் றுக்கும்
அடித்தள மென்னவு மடையா மன்னவர்
மலைத்தளம் பறித்தம் மன்னவர் சுமந்த
சிலைத்தளங் கொண்டு செய்தசிலைத் தளமும்
எல்லையி லுகந்தொறுஞ் செல்வந் தொலையாது
வரும்படி வகுத்த நிச்சங்க மல்லன்
பெரும்பண் டாரமும் பிறைமுடிப் பெருமாள்
இந்நாள் வந்தி ருந்தமை தோன்றவும்
முன்னு ளளந்த முறைமை காணவும்
வாட்டடங் கண்ணியர் மனைதொறும் பலிகொளக்
காட்டிய வடிவிற் கங்காள வேடமும்
வான்முகத் தமரர் வணங்கச் செய்தே
நான்முகத் தெரு நாயகி தனக்கும்
அப்படி வகுத்த வணிநெடுந் தெருவும்
செப்பிய கதிரவர் திசைவலம் போதும்
சோதி நன்மணி வீதிக ளிலங்கக்
கலைபயில் தவத்தோர் நிலைபெற விருக்க
மலைவகுத் தனைய காங்கயன் மடமும்
கானிற் பயிலும் கடவுளர் தமக்கு
வேனிற் றென்றல் வியன்பெருங் கவரி
இருமருங் கிரட்ட யிமையவர் துதிக்கவும்
மருமணம் பெருகிய வாள்வல பெருமாள்
திருநெடுந் தோப்புந் தீர்த்த மாகிய
அமுத நன்னதி யனைத்திலும் தூய
தமிழ்நாடு காத்த பெருமாள் தடாகமும்
வண்டிசை பாடல் மதுமலர் வாசம்
கொண்ட காடவர் குமாரன் தோப்பும்
கவின் வெம்பரிக் கதிர்வழி தடுத்த
அவனி யாளப் பிறந்தான் தோப்பும்
தலநிகழ் சேனைத் தலைவன் தோப்பும்

வெம்மை நாளில் வெஞ்சுரம் நடந்தவர்
தம்மனங் குளிரத் தண்டலை நிழற்செயும்
அம்மை மடமு மைய னேரியும்
வெற்பகந் துளைத்தெனக் கற்புடைய ராகி
அடல்நெடும் பிலத்தி லமுதுவந் தெழுந்த
வடிவாள் வல்லபெருமாள் கிணறும்
அளிமுரல் கமலமு மாம்பலும் மலர்ந்த
குளிர்புனற் காடவ குமாரன் றடாகமும்
குன்று கரையன்ன கோடியர் நெடுங்கரை
வென்றுமலை கொண்ட பெருமா ளேரியும்
சுரர்தரு நெருங்கிய சோலையு மொவ்வாப்
பரதம் வல்ல பெருமாள் தோப்பும்
வளஞிமி முர்க்கும் மடவிளம் பாளை
விரைகமழ் வீர ராயன் தோப்பும்
தவநெறிச் சுந்தரர் தம்பெருங் குலத்திற்
த............ற்குச் செய்து கொடுத்த
கடலென நிறைந்து கார்வயல் விளைக்கும்
விச்.........சை நிச்சங்க மல்ல னேரியும்
காங்கயன் தடாகமும் காங்கயன் மடமும்
பூங்கமழ் சோலையும் பொற்புடன் விளங்க
இவ்வகை யாவையும் செய்தன னதனாற்
பாவை பாகன் சேவடித் தாமரை
யணிந்த சென்னியர் பார்க்குங் கண்ணினர்
அணிந்த நீற்றின ராகம நன்னெறிப்
படிந்த நெஞ்சினர் பரசம யங்கடலை
கடிந்த வாளையர் கண்ணுதற் பெருமான்
ஆதி நாதனாய் வேடங் கொண்டு
பாய்புனற் கங்கை யாயிர முகங்கொண்
டார்த்தெழு மன்னு ளேற்றுக் கொண்ட
திருந்திய பிறைமுடி யருந்தவச் சடாதரர்
ஆதியி லஞ்செழுத் தோதிய தொண்டரென்
றெண்ணிய நாற்பத் தெண்ணா யிரவரும்
திருவரு ளிவன்மேல் வைத்தனர்
இருநிலந் தன்னி லினிதுவாழ் கெனவே.

## திருவண்ணாமலையைப் புகழும் நூல்கள்

இவை நூற்றுக்கணக்கிலுள்ளன. இவற்றுள் முக்கியமானவை கீழ்வருவனவாகும் :—தேவாரத்துள் முதல் திருமுறை 10-வது 69-வது பதிகங்கள், நான்காம் திருமுறை 63-வது பதிகம், ஐந்தாம் திருமுறை 4-வது 5-வது பதிகங்கள் ; திருவாசகத்துள் திருவெம்பாவையும் திருஅம்மானையும்; பதினோராந் திருமுறையுள் 11.15, 22.14, 23.42, 29.63 ஆகிய நான்குபாடல்கள்; பெரியபுராணத்துள் 27. 311—313, 34.969—972 ஆகிய ஏழு பாடல்கள் ; திருப்புகழுள் 87 பாடல்கள் (சமாஜப் பதிப்பு பார்க்க); கந்தபுராணத்துள் ஒரு பாடல் ; துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளியற்றிய சோண சைலமாலை ; சைவ எல்லப்ப நாவலரியற்றிய திரு அருணைக் கலம்பகம், அருணாசல புராணம், திருவருணையந்தாதி ; குகை நமச்சிவாயரியற்றிய அருணகிரியந்தாதி ; குருநமச்சிவாயரியற்றிய அண்ணாமலை வெண்பா ; திருச்சிற்றம்பல நாவலரியற்றிய அண்ணாமலை சதகம்.

## திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேசுவரர் தேவஸ்தான ஆகம பாடசாலை பாட திட்டங்கள்

### *1-வது வருஷம்*

வேதம் :—ஸ்ரீருத்திரம், சமகம், புருஷசூக்தம், ஸ்ரீ சூக்தம், துர்க்கா சூக்தம், பூ சூக்தம், ஓஷதீ சூக்தம், மிருத்யு சூக்தம், ஆயுஷ்ய சூக்தம், ப்ரம்ம சூக்தம், விஷ்ணு சூக்தம், ருத்திர சூக்தம், பஞ்சசாந்தி நவக்கிரக மந்திரம், தீபாராதனை மந்திரங்கள், புண்ணியாவாசன மந்திரம், வருண சூக்தம்.

ஆகமம் :—தியானமுக்தாவளி - கணபதி - சிவன் - அம்பாள் - நடேசர் - சுப்பிரமணியர் - சண்டேசுவரர் - தக்ஷிணாமூர்த்தி - நந்திகேசுவரர் - நவக்கிரகம் முதலிய

மூர்த்திகளுக்கு அர்ச்சனைகள், ஸ்தோத்திரங்கள், சிவசஹஸ்ர நாமம், லலிதா ஸஹஸ்ரநாமம், த்வஜாரோகண சூர்ணிகைகள்.

சாஸ்திரம் - காவ்ய முதலானவைகள் :—சப்தமஞ்ஜரீ, தாதுரூபாவளி, ஸமாஸகுஸுமாவளி, அமரகோசம் 1-வது காண்டம், ரகுவம்சம் - காவ்யம் 1, 2 சர்க்கம்.

## 2-வது வருஷம்

வேதம் :—நக்ஷத்திர ஹோம மந்திரங்கள், மகன்னியாசம், மந்திரப்ரச்னம், உதகசாந்தி, கணபதி உபநிஷத், தைத்தரீயோபநிஷத்.

ஆகமம் :—பரார்த்த நித்தியபூஜை விதி, சிவலிங்கப் பிரதிஷ்டை, தேவீ பிரதிஷ்டை, சந்தியாவாஹநம், ஆசீர்வாதம், அர்ச்சனாவிதி (காமிகாகமம் பூர்வபாகம்).

சாஸ்திரம் - காவ்ய முதலானவை :—குமாரசம்பவம் (காவ்யம்) 1, 2, 3, 4 சர்க்கங்கள், மேகதூதம் (காவ்யம்), மாகம் (சிசுபாலவதம் காவ்யம்), போஜ சம்பூ (காவ்யம்).

## 3-வது வருஷம்

வேதம் :—போதாயன சூத்திரம் பிரயோகம், ஜயாதி மந்திரங்கள், வேத ஆசீர்வாத மந்திரங்கள், பஸ்ம ஜாபால உபநிஷத்.

ஆகமம் :—வியோமவியாபீபதமந்திரம், கணபதி பிரதிஷ்டை, சுப்பிரமண்ய பிரதிஷ்டை, சைவகால விவேகம், சித்தாந்த ஸாராவளி - கிரியாபாதம் - சரியாபாதம்.

சாஸ்திரம் - காவ்ய முதலானவைகள் :—சிவலீலார்ணவம் (காவ்யம்), நீலகண்ட சம்பூ (காவ்யம்), லகு கௌமுதீ (வியாகரணம்), சிவானந்த லஹரீ (ஸ்தோத்திரம்).

### 4-வது வருஷம்

வேதம் :—ஸ்ரீருத்திரம் - பதம் - கிரமம், பஞ்ச ருத்திரம், கைவல்ய உபநிஷத் முதலானவை.

ஆகமம் :—தத்துவபிரகாசிகா, சித்தாந்த ஸாராவளி (ஞானபாதம் - யோகபாதம்), போக காரிகை, ஆத்மார்த்த பூஜாவிதி.

சாஸ்திரம் - காவ்ய முதலானவைகள் :—சாகுந்தலம் (நாடகம்), சித்தாந்த கௌமுதீ - பூர்வம், தர்க்க ஸங்கிரஹம், பர்த்து லஹரீ, அநர்க்கராகவம் (நாடகம்).

### 5-வது வருஷம்

வேதம் :—யஜுர் வேதம் 4-வது காண்டம், அஷ்டகம் 3-வது, அதர்வசிரஸ் - அதர்வசிகை முதலான உபநிஷத்.

ஆகமம் :—பௌஷ்கராகமம், மிருகேந்திராகமம், மாயா லக்ஷண பிரகரணம், காமிகாகமம் (உத்தர பாகம்).

சாஸ்திரம் - காவ்ய முதலானவைகள் :—ஸித்தாந்த கௌமுதீ (உத்திரபாகம்), தர்க்கசாஸ்திரம் (முக்தாவளீ), பிரதாப ருத்திரீயம் (அலங்காரம்), சந்திராலோகம் (அலங்காரம்), சிவமகிம்ந ஸ்தோத்திரம்.

---

‘ தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணுமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே ’

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1